சுருக்கம்

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஆலந்தூர் நகராட்சிக்கு விரிவான குடிநீர் அபிவிருத்திப் பணிகள் ரூ.6439.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி2) துறை

அரசு ஆணை (2D) எண். 57 நாள்: 23.06.2009

படிக்கப்பட்டவை

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம்
எண்.52022/2008/JNN1, நாள்.30.1.2009

*****

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் ஆலந்தூர் நகராட்சியில் மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் நிதியுதவியுடன் ரூ.6439.00 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான குடிநீர் அபிவிருத்திப் பணிகளை செயல்படுத்த நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2) மேற்காணும் பொருள் குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது கடிதத்தில் ஆலந்தூர் நகராட்சியில் விரிவான குடிநீர் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, முகவரமைப்பான தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் மூலம் மத்திய அரசின் நகர்ப்புர வளர்ச்சித்துறையின் மத்திய திட்ட அனுமதி வழங்குதல் மற்றும் கண்காணிக்கும் குழுவின் 9.1.2009 அன்று நடைபெற்ற கூட்டத்தில் (Central Sanctioning and Monitoring Committee) ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார். அக்கூட்டத்தில், இவ்விரிவான திட்ட அறிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டது. மேலும் மத்திய திட்ட அனுமதி வழங்குதல் மற்றும் கண்காணிக்கும் குழுவின் ஒப்புதலின் அடிப்படையில் முகவரமைப்பான தமிழ்நாடு நகர்ப்புர மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் இத்திட்டத்திற்கு கடன் மற்றும் மான்யத்திற்கு அனுமதி அளித்து நிர்வாக அனுமதி பெறுமாறு கோரியுள்ளார்.

3) மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் அளித்துள்ள கடன் மற்றும் மான்யம் கடிதத்தில் கீழ்க்கண்ட விவரம் அளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எ ண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மத்திய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | மத்திய அரசின் முதல் தவணை | மாநில அரசின் முதல் தவணை | மொத்தம் (6 +7 = 8) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | ஆலந்தூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள | 6439.00 | 2254.00 | 965.85 | 564.00 | 241.46 | 805.46 |

4) எனவே, ஆலந்தூர் நகராட்சியில், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மொத்த செலவினத்தில் மத்திய அரசின் பங்கீடான ரூ.2254.00 (35%) மற்றும் மாநில அரசின் பங்கீடான 965.85 (15%) போக மீதமுள்ள 50% நகராட்சியின் பங்கு மற்றும் நிதி நிறுவன கடன் மூலம் ஏற்கப்பட்டு ஆக மொத்தம் ரூ.6439.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆலந்தூர் நகராட்சி பகுதியில் விரிவான குடிநீர் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள திட்டப்பணிகளை செயல்படுத்த நிர்வாக அனுமதி வழுங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

5) மேலே பத்தி 4 ல் பெறப்பட்ட நகராட்சி நிர்வாக இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து ஆலந்தூர் நகராட்சிக்கு மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.6439.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆலந்தூர் நகராட்சி பகுதியில் விரிவான குடிநீர் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள திட்டப்பணிகளை செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசு செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை 5.
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வளர்ச்சிக் கழகம், சென்னை 35
மண்டல நிர்வாக இயக்குநர், செங்கல்பட்டு.
ஆணையர் ஆலந்தூர் நகராட்சி, சென்னை.
மாநில கணக்காயர், சென்னை 18.
மாநில கணக்காயர் (தணிக்கை) சென்னை 9.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை 9.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, குறளகம், சென்னை 108.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை9.
நகல்.
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) துறை, சென்னை 9.
(வரவு செலவு / அநமு.2) துறை, சென்னை 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது.//

பிரிவு அலுவலர்